## ஏப்ரல்- 12- வியாழன்

**புனித யூலியஸ்**

**நான் ஆண்டவரைப்பற்றிப் பெருமையாகப் பேசுவேன்: திபா. 34:2**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்5 : 27 – 33

அக்காலத்தில் காவலர்கள் திருத்தூதர்களை அழைத்துக்கொண்டு வந்து யூதத் தலைமைச் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். தலைமைக் குரு அவர்களை நோக்கி,"நீங்கள் இந்த இயேசு பற்றிக் கற்பிக்கக் கூடாது என்று நாங்கள் கண்டிப்பாய்க் கட்டளையிடவில்லையா? என்றாலும் எருசலேம் முழுவதும் நீங்கள் கற்பித்து வருகிறீர்கள். மேலும் இந்த மனிதருடைய இரத்தப் பழியையும் எங்கள்மீது சுமத்தப் பார்க்கிறீர்களே!" என்றார்.அதற்குப் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, "மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்?நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார்.இஸ்ரயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார்.இவற்றுக்கு நாங்களும் கடவுள் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்" என்றனர்.இவற்றைக் கேட்ட தலைமைச் சங்கத்தார் கொதித்தெழுந்து, திருத்தூதர்களைக் கொல்லத் திட்டமிட்டனர்.

**பதில்பாடல் :** ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்.

### நற்செய்தி : யோவான் 3 : 31 – 36

அக்காலத்தில் இயேசு நிக்கதேமிடம் கூறியதாவது:மேலிருந்து வருபவர், அனைவரையும்விட மேலானவர். மண்ணுலகிலிருந்து உண்டானவர் மண்ணுலகைச் சேர்ந்தவர். மண்ணுலகு சார்ந்தவை பற்றியே அவர் பேசுகிறார். விண்ணுலகிலிருந்து வருபவர், அனைவருக்கும் மேலானவர்.தாம் கண்டதையும் கேட்டதையும்பற்றியே அவர் சான்று பகர்கிறார். எனினும் அவர் தரும் சான்றை எவரும் ஏற்றுக்கொள்வதில்லை.அவர் தரும் சான்றை ஏற்றுக் கொள்பவர் கடவுள் உண்மையானவர் என்பதை உறுதிப்படுத்துகிறார்.கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். கடவுள் அவருக்குத் தம் ஆவிக்குரிய கொடைகளை அளவின்றிக் கொடுக்கிறார்.தந்தை மகன் மேல் அன்பு கூர்ந்து அனைத்தையும் அவர் கையில் ஒப்படைத்துள்ளார்.மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் வாழ்வைக் காணமாட்டார். மாறாகக் கடவுளின் சினம் அவர்கள்மேல் வந்து சேரும்" என்றார்.

**தியானம்:** இறைகட்டளைக்கு மனிதன் கட்டுப்பட முடியாவிடின் முடிவு எப்படியாகும் என்பதனை நற்செய்தி தெளிவாகக் கூறுகின்றது. எமது பரலோக தகப்பன் மீதும், அவரது திருமகனான இயேசு ஆண்டவர் மீதும் நாம் வைக்கின்ற நம்பிக்கையால் நிலை வாழ்வைப் பெறுவோம். மீறி வாழ்வோர் மீது கடவுளின் சினம் வந்துசேரும். இதுவே இன்றைய நற்செய்தின் சாரம். ஆண்டவரது சினம் எமது உள்ளத்தை ஆராய்ந்து பார்க்கும் உண்மையான அன்பின் வெளிப்பாடாக மட்டுமல்ல, எமது பாவத்திற்கு எதிரானதாகவும் இருக்கின்றது. எனவே, நிபந்தனையற்ற விதத்தினில் எம்மை அன்பு செய்யும் இறைவனை மறந்து சாத்தானோடு சேர்ந்து வாழும் தோழமைக்கு எதிராக இறைவன் தமது சினத்தை வெளிப்படுத்துவது நியாயமானதே. இவ்வுலகில் நாங்கள் நல்லவர்கள், புத்திசாலிகள் இரட்சிக்கப்பட்டவர்கள், புதுவாழ்வு பெற்றவர்கள், இறைமகன் கிறிஸ்து இயேசுவை ஆண்டவரென விசுவசித்து ஏற்றுக்கொண்டு வாழ்கிறோம் என்று பறைசாற்றக்கூடாது. மாறாக, எமது செயல்கள் பரிசுத்த ஆவியானவரது தூண்டுதலுக்கு அமைவாக உள்ளனவா என நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் எமக்குக் கற்றுத் தருவதற்கமையவே, நாம் இறைமகன் கிறிஸ்து இயேசுவை ஆண்டவர் என ஏற்று அறிக்கை செய்யவேண்டும். இறைமகன் கிறிஸ்து இயேசுவின் உத்தான மகிமையைக் கொண்டாடும் நாம் எமதுள்ளத்தில் ஏற்படக்கூடிய மனித உணர்வுகளால் இறை பிரசன்னத்தை உணர முடியாத தடைகளிலிருந்து வெளிவருவோம். நாம் பாவி என உணர்ந்து இறைவனது மன்னிப்பைப் பெறுவதற்குப் பரிகாரம் செய்வோம். மாறாக பாவ வாழ்க்கைக்குள்ளேளேயே மூழ்கி இருப்போமாயின், ஆண்டவரது சினத்திற்கு ஆளாவோம் என்பது உண்மை. இறுதிக்காலம் இதுவென உணர்ந்து செயற்படுவோம். ஏனெனில், ஆண்டவர் எத்துனை இனியவர் என்று சுவைத்துப்பார்க்க நாம் அழைக்கப்பட்டிருப்பதால், "உண்மையாய்த் தம்மைநோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார" (திருப்பாடல் 145:18) என்ற வரிகளின் அர்த்தத்தினை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். ஏனெனில் "நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்".